## தலைப்பு 289 – ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தித்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

  எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) ஆம் பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்குரியதாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 7(vi) பந்தியின் பிரகாரம் நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் ரூபா 104,719,508 ஆன மீதிக்கு கட்டுநிதி இணக்க கணக்கொன்று சரியாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | சரியாக கட்டுநிதி கணக்கொன்று தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் கணக்காய்வினால் சுட்க காண்பிக்கப்பட்டதன் பின்னர் 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 7(vi) பந்தியின் பிரகாரம் கட்டுநிதி இணக்க கணக்கொன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது. |

**1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

**(அ) நிதி நிலைமை கூற்று**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) நிதி நிலைமை கூற்றில் ரூபா 281,472,925 ஆன நிலையான சொத்துக்கள் காண்பிக்கப்பட்ட போதும் நிலையான சொத்துக்கள் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | ஆண்டின் இறுதியில் நிலையான சொத்துக்கள் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் | 2018 ஆம் ஆண்டின் போது CIGAS நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தும் போது இடம்பெற்ற தவறொன்று காரணமாக அரச கணக்குகள் திணைக்களத்தினால் அத்தரவுகளை அழித்துள்ளதுடன் எதிர்காலத்தில் அப்பதிவேடுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும். |
| (ii) திறைசேரி அச்சீட்டுப் பிரதியின் பிரகாரம் 2018 சனவரி 01 இல் | திறைசேரி அச்சீட்டுக் குறிப்புடன் ஒப்பிட்டு | ஆரம்ப மீதியாக கணக்கீடு செய்த |

| | | |
|---|---|---|
| உளளவாறு மீதி ரூபா 37,360,122 ஆக இருந்ததுடன் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் அம்மீதி ரூபா 2,596,211,542 ஆக இருந்தமையால் ரூபா 222,261,420 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | கணக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். | சொத்துக்கள் அறிக்கை (Bos Report) சமப்படுத்தப்படாமையால் இரத்துச் செய்யப்பட்டுள்ளதால் அவற்றையும் மீண்டும் கணனி நிகழ்ச்சித்திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டன. |
| (iii) நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் மீளாய்வாண்டின் கொள்வனவுப் பெறுமதி ரூபா 21,851,383 ஆக இருந்த போதிலும் திறைசேரி அச்சீட்டுப் பிரதியின் பிரகாரம் கொள்வனவாக ரூபா 14,165,029 ஆன மீதியொன்று காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவினமான ரூபா 13,248,754 மற்றும் திணைக்களச் செலவினம் ரூபா 8,602,729 உடன் கூட்டுத்தொகை ரூபா 21,851,483 தொகை ஆண்டின் கொள்வனவாக காண்பிக்கப்பட்டிருந்தமை. |

**(ஆ) நிதி செயலாற்றல் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| (i) நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் வைப்பு பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 36,899,162 ஆக இருந்த போதிலும் திறைசேரி அச்சீட்டுப் பிரதியின் பிரகாரம் அம்மீதி ரூபா 37,725,353 ஆக இருந்தமையால் ரூபா 826,131 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | பணமாக கிடைத்த மற்றும் வரவு பதிவுகள் மூலம் கிடைத்த மொத்த வைப்புக்களின் பெறுமதி நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டும். | வைப்புக் கணக்கின் கீழ் பணமாக கிடைத்த ரூபா 36,899,162 ஆக இருந்ததுடன் வரவுப் பதிவுகள் மூலம் பெறுவனவுகள் ரூபா 826,191 ஆக இருந்தது. அப்பெறுமதிகளின் கூட்டுத்தொகை திறைசேரி அச்சீட்டுப் பிரதியில் மொத்தமாக காட்டப்பட்டுள்ளது. |
| (ii) நிதிச் செயலாற்றல் கூற்றில் முற்பணங்களின் பெறுவனவாக ரூபா 587,455 ஆக காண்பிக்கப்பட்டிருந்த இருந்த போதிலும் திறைசேரி அச்சீட்டுப் பிரதியின் பிரகாரம் அம்மீதி ரூபா 31,555,342 ஆக | - மேற்படி - | காசாக பெறுவனவு நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ளது வரவுப் பதிவுகள் பெறுவனவுகள் மற்றம் பணமாக பெறுவனவுகளின் |

| | | | |
|---|---|---|---|
| | இருந்தமையால் ரூபா 30,967,887 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | | கூட்டுத்தொகை ரூபா 31,555,343 தொகை முற்பணக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. |
| (iii) | நிதிச் செயலாற்றல் கூற்றில் ஏனைய பெறுவனவுகளாக பெறுமதி ரூபா 79,643,440 ஆக இருந்த போதிலும் திறைசேரி அச்சீட்டுப் பிரதியின் பிரகாரம் தேறிய வருமானம் ரூபா 113,074,077 ஆக இருந்தமையால் ரூபா 33,430,6371 ஆன வேறுபா டொன்று அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | நிதிச் செயலாற்றல் கூற்றில் கட்டுநிதி கணக்கிற்குரிய மொத்த பெறுவனவுகள் ரூபா 1,086,631,057 தயாரிக்கப்பட்டுள்ள விதம் வெவ்வேறாக காண்பிக்கப்பட்டிருந்தது மாதாந்த கணக்கு பொழிப்பின் பிரகாரம் எவ்வித வேறுபாடொன்றும் இல்லையென தயவுடன் கவனத்திற் கொள்ளவும். |
| (iv) | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் அறிக்கை மற்றும் வைப்பு பதிவேடுகளின் ஆரம்ப மீதிகளுக்கு இடையெ ரூபா 31,599 ஆன வேறுபாடு காணப்பட்டது. யனி பிரகாரம | ரூபா 31,599 ஆன வேறுபாடு தீர்வு செய்யப்பட்டு அது தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | வைப்பு பதிவேட்டிற்கு இடையே ரூபா 11,601 ஆன தேறிய வேறுபா டொன்று காணப்பட்டதுடன் அதனை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**1.6.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்க கூற்று**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | மரணித்த, ஓய்வுபெற்ற, சேவையை விட்டுச்சென்ற 11 ஊழியர்களிடமிருந்து 2013 ஆம் ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டிய ரூபா 429,818 ஆன கடன் தொகை 2019 மே மாதம் வரை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இம்மீதிகளை தீர்வு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். | ஓய்வுபெற்ற 04 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 597,519 ஆன கடன் மீதிகள் 2019 மே மாதம் தீர்வுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. எஞ்சிய ரூபா 245,330 ஆன கடன் மீதியை எதிர்வரும் காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ஆ) | 2001 ஆம் ஆண்டு சேவையை விட்டுச்சென்ற உத்தியோகத்தரொருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 232,965 ஆன கடன் மீதி சட்டமா அதிபரின் ஆலோசனையின் | ரூபா 232,965 ஆன கடன் மீதகள் எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் பிரதேச செயலாளரினால் செயற்படுத்த முடியாதிருந்ததாக குறிப்பிட்டிருந்ததுடன் நிதிப் பிரமாணம் 109 இன் கீழ் |

| | | | |
|---|---|---|---|
| | பேரில் பிரதேச செயலாளரினால் செயற்படுத்த முடியாதிருந்ததாக குறிப்பிட்டிருந்ததால் கடன் மீதி தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | | கடன்தொகையை பதிவழிப்பது தொடர்பாக தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

**1.6.4 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை**

ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் (பின்வரும் சில பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டது. விபரம் வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிணைகள் பதிவேடு | | |
| | நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடங்கிய பிணைகள் பதிவேடொன்று நாளது வரையாக பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உள்ளடங்கும் விதத்தில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பான பிணைகள் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | பிணைப் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது |
| (ஆ) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | | |
| | நிதிப்பிரமாணம் 454(2) இன் பிரகாரம் மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 454(2) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரசாங்க கட்டிடங்களிலுள்ள அனைத்து மின்சார உபகரணங்கள் தொடர்பான பொருட் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | கருத்துரை தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | வாகன நிரட்படுத்தும் பதிவேடு | | |
| | நிதிப்பிரமாணம் 1647(உ) இன் பிரகாரம் வாகன நிரட்படுத்தும் பதிவேடொன்று நாளது வரையாக பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 1647(உ) இன் பிரகாரம் வாகன நிரட்படுத்தும் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | வாகன நிரட்படுத்தும் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | பெறுகைகள் குழுவின் மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுக்களின் வருகைப் பதிவேடு | | |
| | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டிக்கமைய குழுவின் செயலாளரால் வருகைப் பதிவேடொன்று | குழுவின் செயலாளரால் வருகைப் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுக்களின் வருகைப் பதிவேடு 2019 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக |

| | |
|---|---|
| பேணப்பட்டிருக்கவில்லை . | குறிப்பிடப்பட்டிருந்தது. |

**1.6.5 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்வது அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் இடம் பெற வேண்டிய போதிலும் அம் மீளாய்வு எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கருத்துரை அளிக்கப்பட்டிருக்கவில்லை . |

**1.6.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | அவதானிப்புக்கள்<br>இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | | | |

---------------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| (i) xix ஆம் அத்தியாயத்தின் 5.6 உப பிரிவு | - | 33 உத்தியோக விடுதிகள் தொடர்பாக சிக்கனமற்ற வாடகை அடிப்படையாக கொண்டிருந்த போதிலும் அதற்கு அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள் ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது |
| (ii) xix ஆம் அத்தியாயத்தின் 6.1.1 உப பிரிவு | | அனைத்து அரச விடுதிகளின் குத்தகை காலம் 05 ஆண்டு காலமாக இருந்த போதிலும் திணைக்களத்திற்குரிய 08 உத்தியோகத்தர்கள் 06 ஆண்டு முதல் 18 ஆண்டுகள் வரையான காலம் இருப்பதாக அவதானிக்கப்பட்டது. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஒவ்வொரு துறைகளில் விசேட அறிவுடன்கூடிய உத்தியோகத்தர் களாக இருப்பதால் உரிய ஆராய்ச்சி நிலையங்களுக்கு அருகில் குடியிருத்தல் மற்றும் விரிவாக்கல் உத்தியோகத்தர்கள் உரிய பிரிவுகளுக்கு அண்மையில் குடியிருத்தல் காரணமாக உத்தியோகபூர்வ விடுதி வழங்கப்பட்டுள்ளது. உத்தியோகத்தர் பற்றாக்குறை காரணமாக சில உத்தியோகத்தர்கள் நீண்டகாலமாக உத்தியோகபூர்வ விடுதிகளில் குடியிருக்கின்றனர். |
| (ஆ) இலங்கை சநனநாயக சோஷலிசக் குடிரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 570 ---------------------------- | - | அரையாண்டு இறுதியில் முன்னைய ஆண்டின் சகல வைப்புக்கள் தொடர்பாக பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | பட்டியல் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வைப்புக் கணக்கின் மீதிகள் ஒப்பிடப்பட்டதன் பினனர் விரைவில் இணக்கக் கூற்றொன்றை சமர்ப்பிபதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (இ) 2016 திசெம்பர் 29 ஆந் | - | திணைக்களத்திட | சுற்றறிக்கையி | 51 வாகனங்களில் |

| | | | |
|---|---|---|---|
| திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | முள்ள 95 வாகனங்களில் 44 வாகனங்களுக்குரிய எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்பட்டிருக்க வில்லை. | ன் பிரகாரம் எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்பட வேண்டும். | எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்பட்டுள்ள ன |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஏனைய திணைக்களத்தின் செலவினத்திற்கான கட்டுநிதி ஏற்பாடு 361 சதவீதமான நடைமுறைச்சாத்தியமற்ற வகையில் திருத்தம் செய்யப்பட்டிருந்தது. | காலாண்டு அடிப்படையில் திருத்தம் செய்யப்பட்ட போதும் நடைமுறைச் சாத்தியமற்ற வகையில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க கூடாது. | ஆண்டினுள் ஏனைய திணைக்களங்க்ள மூலம் நிறைவேற்றுவதற்கு நேரும் நிர்மாண செயற்பாடு களுக்கு நிதி ஏற்பாடு விடுவிக்கப்படுவதால் காலாண்டு அடிப்படையில் கட்டுநிதி மீதி திருத்தம் செய்வதற்கு நேர்ந்தது. |

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 14 செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 536,390,000 ஆன தேறிய ஏற்பாட்டில் ரூபா 6,757,050 ஆன அதாவது 5 சதவீதம் முதல் 76 சதவீதம் வரையான வீச்சில் நிதிஏற்பாடு பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. | ஆண்டின் ஆரம்பத்தின் போது பெறுகை செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு கட்டுநிதி பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பெரும் போகத்தில் பயிர்ச் செய்கைக்காக நடுகை பொருட்கள் ஆண்டின் இறுதிப் பகுதியில் வழங்கப்படுவதால் ஆண்டின் இறுதியில் கட்டுநிதி கிடைக்காததன் பேரில் இந் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. |

**2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 94(2) ஏற்பாடுகளுக்கு புறம்பாக திணைக்களத்தினால் 05 மூலதன செலவின விடயங்களுக்குரிய ரூபா 24,216,161 கூட்டுத்தொகையான கடப்பாடுகளுக்கு உட்பட்டிருந்தன. | நிதிஏற்பாடுகளை மிகைத்து பொறுப்புக்களை ஏற்படுத்த இருக்க நடவடிக்கை எடுக்கப்படாமல் இருப்பதுடன் முடியுமான வரை செலவினங்களை ஆண்டினுள் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவசர திருத்தங்களின் போது மாத்திரம் நிறைவேற்ற நேர்ந்தமை மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் கட்டுநிதி கிடைப்பனவு மட்டுப்படுத்தப்பட்டதன் பேரில் ரூபா 113 மில்லியனான கொடுப்பனவுகளை தீர்வு செய்வதற்கு நேர்ந்தமை காரணமாக நிதி ஏற்பாடுகளை மிகைத்து பொறுப்புக்கள் ஏற்படுத்த நேர்ந்தது. |

**2.4 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டின் பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வெவ்வேறு செயற்திட்டங்களுக்காக ரூபா 15,670,339 ஆன நிதிஏற்பாடு வழங்கபப்ட்டிருந்த போதிலும் குறித்துரைக்கப்பட்டதன் பிரகாரம் செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமல் ரூபா 2,479,498 தொகை மீள அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. | வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை உயர்ந்த அளவில் பயன்படுத்துவதற்கு திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | உரிய செயற்பாடுகளை நிறைவேற்றப்படாததன் பேரில் ஆரம்ப கைத்தொழில் அமைச்சினால் வழங்கப்பட்ட இந்நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டது. |

**2.5 முற்பணங்களை வழங்குதலும் தீர்வுசெய்தலும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) குறித்த செயற்பாடு முடிவடைந்து 10 நாட்களுக்குள் கட்டுநிதி தீர்வுசெய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா 3,724,059 | பெற்றுக்கொண்ட முற்பணத்தை தாமதமின்றி தீர்வு செய்யநடவடிக்கை எடுக்கப்பட | இந்நிகழ்ச்சித்திட்டங்கள் வெளிக்கள நிகழ்ச்சித் திட்டங்களாக இருந்ததுடன் அலுவலகங்களில் கொடுப்பனவு காசேடு |

| | | | |
|---|---|---|---|
| | ஆன 121 முற்பண மீதிகள் 10 நாட்கள் முதல் 313 நாட்கள் வரையான காலமொன்று தாமதமாக தீர்வு செய்யப்பட்டிருந்தன. | வேண்டும். | இல்லாமையால் குறித்த நிகழ்ச்சித்திட்டங் களுக்காக முற்பணம் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்நிகழ்ச்சித்திட்டங்கள் கூடிய காலப்பகுதியில் செயற்படுத்தப்பட்டமை. |
| (ஆ) | 15 சந்தர்பக்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 381,695 ஆன முற்பணத் தொகை எவ்வித செயற்பாட்டிற்கும் பயன்படுத்தப்படாமல் 16 நாட்கள் முதல் 133 நாட்கள் வரையான காலமொன்று கையில் வைத்திருக்கப்பட்டு முழுப்பணமும் மீள தீர்வு செய்யப்பட்டிருந்தன. | குறித்த கொள்வனவிற்காக முன் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் முற்பணத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விதைகள் கொள்வனவிற்கு முற்பணம் வழங்கப்பட்டிருந்ததுடன் விதைகளை தெரிவுசெய்வதற்கு காலம் எடுத்தமை, நிகழ்ச்சிகள் இரத்துச் செய்யப்பட்டமை மற்றம் நடுகைப் பொருட்களை பெற்றுக் கொள்ள முடியாததன் பேரில் முற்பணம் செலவிடப்படவில்லை. |
| (இ) | உத்தியோகத்தர்களுக்கு 35 சந்தர்ப்பங்களில் ரூபா 1,163,430 கூட்டுத்தொகையான முற்பணத்தில் ரூபா 671,747 அதாவது 40 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையான வீச்சிலான நிதி மீள நிரப்பியிருக்கவில்லை. | மதிப்பீடுகள் சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட | அவசர தேவைப்பாடாக இருப்பதால் மதிப்பீடு தயாரிக்கும் போது சரியாக தயாரிக்க முடியாதிருந்தது. |

## 2.6 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 மார்ச் 22 ஆந் திகதிய குத்தகை வாகனங்களுக்கான உடன்படிக்கைகளின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு மாதமும் ஆகக்குறைந்தது 3000 கி.மீ ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட வேண்டிய போதிலும் 04 வாகனங்கள் எந்தவொரு மாதத்திலும் 3000 கி.மீ ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | உன்படிக்கையின் பகிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட தூர அளவு ஓட்டத்தில் ஈடுபடுத்தி கிரயத்தை சிக்கனமாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வாடகை அடிப்படையில் பெற்றுக்கொர்ணட 03 வாகனங்கள் கூடுதலாக ஓட்டத்தில் ஈடுபடும் 03 பிரிவுகளுக்கு இணைக்கப் பட்டுள்ளதுடன் எதிர்வரும் காலங்களில் 06 மாதத்திற்கு 06 மாதம் ஓட்ட தூரத்தை மீளாய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.7 வைப்பு மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஒப்பந்த ஊழியர்களை நிரந்தமாக்கிய காரணத்தினால் அரச சேவை சேமலாப நிதியத்திலிருந்து திணைக்களத்திற்கு அனுப்பியிருந்த ரூபா 389,480 ஆல் அநாதை விதவை ஓய்வூதியத்திற்காக சீராக்கம் செய்யப்படாமையால் வைப்பு பதிவேட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | ஒப்பந்த ஊழியர்களை நிரந்தமாக்கிய காரணத்தினால் அநாதை விதவை ஓய்வூதியத்திற்காக தேவையான சீராக்கம் செய்யப்பட வேண்டும் | ஊழியர்களை ஒப்பந்த அடிப்படையில் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட திகதி முதல் வி.அ.ஓ.ச சீராக்கம் செய்யப்பட வேண்டியதுடன் அதற்காக காலம் எடுப்பதால்அதுவரை வைப்புக் கணக்கை தீர்வு செய்ய முடியாதுள்ளது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திட்டமிடல்**

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயலாற்றல் தொடர்பான திட்டமிடல் தொடர்பில் கண்டறியப்பட்ட அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்குரிய செயல் நடவடிக்கைத் திட்டம் காலரீதியில் திருத்தம் செய்யப்பட வேண்டிய போதும் 2018 திசெம்பர் 26 ஆந் திகதியில் உள்ளவாறு செயன் முன்னேற்றத்தை அடிபப்டையாக கொண்டு திருத்தம் செய்யப்பட்டிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டம் நிறுவகத்தின் செயற்பாடுகளின் பிரகாரம் திருத்தம் செய்யப்பட வேண்டும். | 2018 திசெம்பர் 21 ஆந் திகதி வரை செயன் முன்னேற்றத்தை அடிப்படையாக கொண்டு இலக்குகள் திருத்தம் செய்யப்பட்டன. |
| (ஆ) மூலதனச் செலவினமாக ஒதுக்கப்பட்ட ரூபா 500,000,000 ஆன நிதிஏற்பாடுகளில் ரூபா 18,080,000 நிதி ஏற்பாடு நிர்வாக செலவினத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் அந் நிதிஏற்பாட்டிலிருந்து ரூபா 19,680,000 தொகை மூலதனமல்லாத செயற்பாட்டு செலவினத்திற்காக செலவிடப்பட்டிருந்தது. | செயற்பாட்டு செலவினம் மூலதன செலவின விடயங்களின் கீழ் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க கூடாது. | மூலதன செலவின விடயங்களின் கீழ் அதனை செயற்படுத்துவதற்காக செலவிடப்பட்ட மூலதன தன்மையமல்லாத நேர் செலவினங்களுக்காக செலவிட நேர்ந்தது. |

### 3.2 எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டத்தை பெற்றுக்கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தொடர்பாடல் ஊடக செயற்திட்டத்தின் இரண்டு செயற்பாடுகளின் பௌதீக செயன் முன்னேற்றம் 33 சதவீதம் முதல் 58 சதவீதமாக இருந்ததுடன் விலகலில் காணப்பட்ட இரண்டு செயற்பாடுகளின் பௌதீக முன்னேற்றம் 2018 திசெம்பர் 31 இல் பூச்சிய மட்டத்தில் காணப்பட்டது. | பாதீட்டின் மூலம் வழங்கப்படும் நிதிஏற்பாடுகளை உயர் மட்டத்தில் பயன்படுத்த திட்டமிடப்பட வேண்டும். | எதிர்காலங்களில் திட்டமிடப்பட்ட வகையில் தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டத்தை பிரசாரம் செய்வதற்காக தேவையான பெறுகை செயற்பாடுகள் காலநேரத்துடன் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துக்கொள்கின்றேன் |
| (ஆ) | திணைக்களத்திடமுள்ள 10 மத்திய நாற்று மேடைகள் காணப்பட்ட போதும் நாற்றுக்களை வழங்கும் தெவைப்பாட்டில் 8.41 போன் சிறிய அளவொன்றாக இருந்தது. | திணைக்களத்திட முள்ள மத்திய நாற்றுமேடைகளை உயர் அளவிலும் செயற்திறனாகவும் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை தெரிவிக்கவில்லை. |

### 3.3 காலதாமதத்துடன் வேலை ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 09 நிர்மாண வேலைகள் தொடர்பாக திட்டமிடப்பட்ட திகதிகள் மற்றும் உள்ளவாறு ஆரம்பிக்கப்பட்ட திகதிகளுக்கு இடையே 04 மாதங்கள் முதல் 10 மாதங்கள் வரையான வீச்சில் தாமதம் காணப்பட்டது. | பெறுகை வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டுள்ள கால வீச்சுடன் அண்மித்த வகையில் ஒப்பந்தங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிர்மாணவேலைகள் 01 மாதங்கள் முதல் 05 மாதங்கள் வரையான தாமதம் இடம் பெற்றுள்ளதை ஏற்றுக் கொள்வதுடன் குறிப்பான நேர அட்டவணையொன்று தயாரிக்கப்படாத குறைபாட்டை தவிர்த்து 2019 ஆம் ஆண்டின் பெறுகை திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை |

எடுக்கப்பட்டுள்ளது.

**34 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **அரசின் பெறுகை வழிகாட்டல் கோவை** | | |
| (அ) வழிகாட்டலின் 2.5.1(ஆ) பிரகாரம் திட்டமிடப்பட்டதன் பிரகாரம் ஒப்பந்ததை கையளிப்பதற்காக பெறுகை கால அட்டவணை மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை கால அட்டவணையை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பெறுகை கால அட்டவணையை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) வழிகாட்டல் கோவையின் 4.2 இன் பிரகாரம் குறைந்தது மூன்று ஆண்டு காலப்பகுதிக்காக எதிர்பார்க்கப்பட்ட பெறுகை செயற்பாடுகளை விரிவாக உள்ளடக்கி பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிரதான பெறுகை திட்டமொன்று தயாரிக்கப் படாமல் இருந்ததுடன் எதிர்காலத்தில் திட்ட மொன்றை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) வழிகாட்டல் கோவையின் 4.2.2(அ) இன் பிரகாரம் ஒவ்வொரு பெறுகை செயற்பாட்டிலும் படிமுறைகள் காலஅடிப்படையில் விபரிக்கப்பட்டதன் பிரகாரம் கட்டம் 1 மற்றும் 2 என பெறுகை காலஅட்டவணை தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் சகல செயற்பாடுகளும் 2018 பெப்ரவரி 01 முதல் திசெம்பர் 12 ஆந் திகதி வரை என குறிப்பிடப்பட்டிருந்தது. | கட்டம் 1 மற்றும் 2 என பெறுகை காலஅட்டவணை தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது இக்குறைபாடு களை நீக்கி பெறுகை கால அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) வழங்கப்பட்ட ரூபா 70,000,000 ஆன ஒப்பந்தங்கள் தொடர்பாக விபரங்கள் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருக்கவில்லை. | திணைக்களம் வழங்கும் ஒப்பந்தங்கள் தொடர்பாக விபரங்கள் இணையத் தளத்தில் வெளியிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் ஒப்பந்தங்கள் தொடர்பாக விபரங்கள் இணையத்தளத்தில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்.**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மித்தெனிய நாற்றுமேடைக்கு வேண்டுகோளொன்று இல்லாமல் வழங்கப்பட்டிருந்த ரூபா 528,589 பெறுமதியான பொலித்தீன் உரைகள் 01 முதல் 04 ஆண்டு காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற் வகையில் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன. | தேவைப்பாட்டினை இனங்கண்டு கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் கொள்வனவு செய்யும் போது காணப்படும் இருப்பினைக் கருத்திற் கொண்டு கொள்வனவுகளை மேற்கொள்ளுமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறை வழங்கப் பட்டுள்ளன. |
| (ஆ) | திணைக்களத்திற்குச் சொந்தமான 07 உத்தியோகபூர்வ இல்லங்கள் 07 மாதங்கள் முதல் 04 மாதங்களாக மூடப்பட்டிருந்தன. | அரச சொத்துக்களை முழுமையாக பயன்படுத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் விளைவற்ற வகையில் வைக்காமல் இருக்குமாறு அனைவருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. |
| (இ) | தனிப்பட்ட மற்றும் அரசிற்குரிய 203.79 ஹெக்டேயர் அளவலான 37 காணித் துண்டுகள் பயன்படுத்தப்பட்டு வந்த போதும் உரித்தினை கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கையேற்கும் செயற்பாட்டினை நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | திணைக்களத்தினால் பயன்படுத்தப்படும் 37 காணிகள் முறையாக கையேற்பதற்காக அந்தந்த நிறுவனங்கள் தொடர்பாக அந்தந்த நிறுவனங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ஈ) | வெவ்வேறு அரச நிறுவனங்களுக்கரிய 34 வாகனங்களின் உரித்து திணைக்களத்தின் பெயரில் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்திற்கு வாகனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.6 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைப்பு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிணை வைக்க வேண்டிய 61 உத்தியோகத்தர்களில் பிணை வைக்கப்பட்டிருக்கவில்லை. | பிணை கட்டளைச் சட்டம் மற்றும் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட | இதுவரை பிணை வைக்காத உத்தியோகத்தர்கள் இனங்கண்டு அவர்களின் பிணை வைப்புச் செய்வதற்கு உரிய அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்காக பொது |

| | | |
|---|---|---|
| | வேண்டும். | 235 மாதிரிப் படிவம் அமைச்சிற்கு அனுப்பு வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்தினால் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ‘‘நிகழ்ச்சி நிரல்’’ தொடர்பாக அறிந்திருக்காமையால் அதன் செயற்பாடுகள் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை நோக்கி அடைந்து கொள்வதனை மதிப்பிடுவதற்காக அளவுகோல்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் செயற்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு நிலைபேறான அபிவிருத்தி நோக்ககங்களை நிறைவேற்றும் இலக்கின் பிரகாரம் தயாரித்த அமைச்சிற்கு சமர்ப்பிப்பதற்கு தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. |

## 5. நல்லாளுகை

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கும் போது ஆராய்ச்சி நடவடிக்கைகள் மற்றும் பெறுகை நடவடிக்கைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்படாதிருந்ததுடன் நாளாந்த செயற்பாடுகளுக்காக 440 மனித நாட்கள் அதாவது மொத்தமாக திட்டமிடப்பட்ட காலப்பகுதியிலல் 44 சதவீதமும் மூலதன செயற்திட்டங்களுக்கு 108 மனித நாட்களும் அதாவது 11 சதவீதம் மாத்திரம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளை அடிப்படையாக கொண்டு ஆண்டின் இறுதியின் போது கணக்காய்வுத் திட்டம் திருத்தம் செய்யப்பட்டிருந்தது. | சகல துறைகள் மேவுகை செய்யப்படும் வகையில் கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | கணக்காய்வு குழுக்குகளுக்கு சமூகமளித்தல் மற்றும் கணக்காய்வுடன் தொடர்புடைய ஆவணங்க்ள கையேற்றல் கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு உரித்தாக இருப்பதாகவும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் நாளாந்த செயற்பாடுகளாக 17 மாவட்ட அலுவலகங்களிலும் 03 ஆராய்ச்சி நிலையங்களிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2019 ஆம் ஆண்டின் போது 2018 ஆம் ஆண்டின் செயலாற்றல் தொடர்பாகுவம் கவனம் |

செலுத்தி உள்ளகக கணக்காய்வு நடவடிக்கை களில் ஈடுபடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

## 6. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திட்டமிடப்பட்ட இலக்குகள், நோக்கங்கள், செயற்பணி மற்றும் நோக்கங்கள் நிறைவேற்றப்படும் வகையில் சபை தேவைப்பாடு தொடர்பாக முறையான மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு அதனை முழு அளவில் பராமரித்து செல்வதற்கு தேவையான பதவியணியினர் இனங்காணப்பட வேண்டிய போதும் அவ்வாறான இனங்காணலொன்று மேற்கொள்ளப்ப ட்டிருக்கவில்லை. | 2017 சனவரி 11 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க திறைசேரி செயலாளரின் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையில் 05 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ஆ) | கட்டாய சேவைக்காலம் பூர்த்தி செய்யப்படாத சம்பளத்துடன் வெளிநாட்டு கல்வி விடுமுறை பெற்றுக்கொண்டு சேவையை விட்டுச் சென்ற ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 2,651,500 ஆன தண்டப் பணம் 2019 மே மாதம் வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | தவணைப் பணத்தை கூட்டி அல்லது தண்டப் பணத்தை தவணை அடிப்படையில் அறவிடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு மீண்டும் பணிப்பாளர் நாயகத்திற்கு விசாரிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | 13 பதவிகளுக்குரிய 480 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டில் எவ்வித பயிற்சியும் வழங்கப்பட்டிருக்க வில்லை. | இயலளவு அபிவிருத்தி தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளிப்பதற்கான பயிற்சி தேவைப்பட்டு வழங்குவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஈ) | 11 நாற்று மேடைகளில் 06 பதவிகளுக்கான வெற்றிடங்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் காணப்பட்டன. | வெற்றிடங்களை நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது 19 வெற்றிடங்களுக்கு நேர்முக பரீட்சை நடாத்தப்பட்டுள்ளன. ஏனைய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |